STOCK FILE - Spare

(72)

L220

039105

சுருக்கம்

தமிழ்நாடு பள்ளிக்கல்வி சார்நிலைப் பணி - சென்னையிலுள்ள ஒய்எம்.சி.ஏ. உடற்கல்விக் கல்லூரி மற்றும் அதைப் போன்ற பிற கல்லூரிகளால் வழங்கப்படும் பிஎம்எஸ். (Bachelor of Mobility Science for Disabled) பட்டத்தை பி.பி.எட். (Bachelor of Physical Education) பட்டச்சான்றுக்கு இணையாக மதிப்பீடு செய்து அதை தமிழ் நாட்டிலுள்ள பள்ளிகளில் உடற்கல்வி ஆசிரியர் பணி நியமனத்துக்கு உரிய தகுதியாக அங்கீகரித்து ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

பள்ளிக் கல்வி (எம்.1) துறை

அரசு ஆணை (நிலை) எண். 165

நாள்: 20.9.2001
படிக்கப்பட்டவை:

1. பள்ளிக் கல்வி இயக்குநர் கடித எண்.43196/என்.2/99 நாள் 30.10.99.

2. பள்ளிக் கல்வி இயக்குநர் கடித எண்.100999/சி22/99 நாள் 6.6.2000.

3. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையக் கடித எண்.3642/விம.துது.ஊ1/2000 நாள் 20.4.2001.

--------

ஆணை

மேலே படிக்கப்பட்ட பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதங்களில் சென்னை ஒய்எம்.சி.ஏ. கல்லூரி மற்றும் அதேபோன்று பிற கல்லூரிகளில் நடத்தப்படும் பிஎம்எஸ். பட்டப்படிப்பு (Bachelor of Mobility Science for Disabled) தமிழ்நாடு அரசால் எற்கனவே அங்கீகரிக்கப்பட்டு நடைமுறையில் உள்ள பி.பி.எட். (Bachelor of Physical Education) பட்டப்படிப்பிற்கு இணையானதாகக் கருதி தமிழ்நாட்டிலுள்ள பள்ளிகளில் உடற்கல்வி ஆசிரியர் பணி நியமனத்திற்கு தகுதியானதாகக் கருதலாமா என அரசிடம் தெளிவுரை கோரப்பட்டது.

2. மேற்காணும் கருத்துரு மீது பரிந்துரைக்குழுவின் பரிந்துரையை பெற்று அனுப்புமாறு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் செயலர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

3. 3.4.2001 அன்று நடந்த குழு கூட்டத்தில், சென்னையிலுள்ள ஒய்எம்.சி.ஏ. உடற்கல்வி கல்லூரி மற்றும் அதைப்போன்ற பிற கல்லூரிகளினால் வழங்கப்படும் உடல் ஊனம் உற்றவர்களுக்கான பிஎம்எஸ். பட்டத்தினை தமிழ்நாடு பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர் பணி நியமனத்துக்குக் கல்வித் தகுதியான பி.பி.எட். பட்டத்திற்கு இணையாகக் கருதுவதற்கு பரிந்துரைக் குழு பரிந்துரை

(தொடர்)

செய்துள்ளதென தேர்வாணையக் குழுவின் செயலர் மேலே மூன்றில் காணும் கடிதத்தில் அரசுக்குத் தெரிவித்தார்.

4. குழுவின் பரிந்துரையை அரசு தீவிர பரிசீலனைக்குப் பின் ஏற்றுக்கொள்ள முடிவெடுத்துள்ளது. அவ்வாறே சென்னையிலுள்ள ஒய்.எம்.சி.ஏ. உடற்கல்விக் கல்லூரி மற்றும் அதைப் போன்ற பிற கல்லூரிகளால் வழங்கப்படும் உடல் ஊனம் உற்றவர்களுக்கான பி.எம்.எஸ். (Degree of Bachelor of Mobility Science for the Disabled) ஐ பட்டத்தினை தமிழ்நாடு பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர் பணி நியமனத்துக்குக் கல்வித் தகுதியான பி.பி.எட். (Bachelor of Physical Education) பட்டத்திற்கு இணையாகக் கருதலாம் என்று அரசு ஆணையிடுகிறது.

5. இது குறித்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு உரிய அறிவுரை வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

வி.கு. சுப்புராஜ்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை 600 006.
செயலாளர், தமிழ் நாடு அரசு பணியாளர் தேர்வாணையம்,சென்னை–2.
பதிவாளர், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த (ஆர்)துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த(இ)துறை, சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை–9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.

கே.ப.20.9

For S.O.

May be tfd. to APD - Seen